**DEPOSITIONS OF WITNESS**

**(RULE.42 CRP-FORM NO.53)**
**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. VII**
**COIMBATORE**

**STC No**. 305/2023

**Deposition of Witness for: Prosecution** **LW: 3 as PW: 5**

**Name** **:** விஜயக்குமார்

**Father's Name** **:** பொன்னுசாமி

**Occupation** **:**

**Village** **:**

**Taluk** **:**

(1,2,6,7 ம் எதிரிகள் ஆஜர் . எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**Solemnly affirmed in accordance with the provision of the oath act 1969(central act 44 of 1969) on the 07th day of August 2026.)**

**07.08.2026:**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரும்புக்கடை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 15.03.2022 ம் தேதி எதிரிகள் ஆத்துப்பாலம் ஜங்சன் அருகே மாலை 6.30 மணிக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிரிகளின் ஆர்ப்பாட்டத்தால் அங்கு சென்று வந்த போக்குவரத்திற்கும் பொதுமக்கள் நடமாட்டத்திற்கும் இடையூறாக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டார்கள். அப்போது எதிரிகள் ஹிஜாப் தொடர்பான தீர்ப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிரிகளின் மேற்சொன்ன செயலால் பெருத்த சிரமத்திற்கு ஆளாகினர். பின்னர் அப்போது எங்கள் காவல்நிலையத்தில் பணியாற்றி வந்த உதவி ஆய்வாளர் திரு. சின்ராஜ் மற்றும் அவருடன் பணியாற்றிய 4 காவலர்கள் மற்றும் நான் எதிரிகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தோம். பின்பு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

1,2,6,7 எதிரிகள் தரப்பில்  குறுக்கு விசாரணை :

இந்த வழக்கில் சாட்சிகள் அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் ஆர்ப்பாட்டம் செய்ததால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது என்று பொதுமக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் எங்கு நடைபெற்றது என்பதை குறிப்பிடும் வகையில் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றது தொடர்பாக CCTV பதிவுகள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் விசாரணை அதிகாரி தாக்கல் செய்திருப்பார். எதிரிகள் மீது இந்த வழக்கிற்கு முன்பாக எந்த புகாரோ அல்லது நிலுவை வழக்கோ எங்கள் காவல் நிலையத்தில் உள்ளதா என்றால் நினைவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரிகள் மீது என்ன காரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்தோம் என்று தெளிவுபடுத்தாமலேயே இந்த வழக்கை எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd. K. Indhirajith
Judicial Magistrate No.VII,
Coimbatore.